பணிமனை மற்றும் நகரப் பேருந்து

* 395—திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை நகரில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் டெப்போ கட்டவும் இப்பகுதி கிராமங்களுக்கு நகரப் பேருந்து விடவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஊத்தங்கரையில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பணிமனை அமைக்கும் திட்டம் உள்ளது. இதற்காக ஊத்தங்கரையில் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த நிதி ஆண்டில் பணிமனை கட்டுமானப் பணிக்கு இக் கழகத்தின் நிதி அறிக்கையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9-30 மணி

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஊத்தங்கரை அன்னை சத்யா போக்குவரத்துக்கு டிப்போவிற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கே அறிவித்தார்கள். இதனுடைய வேலையைத் துரிதமாக மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே, ஊத்தங்கரை தாலுக்கா காண்டியப்பனூர் என்கிற கிராமப் பகுதியில் $2\frac{1}{4}$ ஏக்கரா நிலம் அதற்காக பார்க்கப்பட்டது. அது பற்றி பேச்சு வார்த்தை நடக்கின்ற நேரத்தில் உரிமையாளர்களில் ஒருவர் தன்னுடைய சொந்தக் காரணங்களினால் அந்த இடத்தைக் கொடுப்பதற்கு இயலாத நிலையிருக்கிறது என்பதைத் தெரிவித்தார். அதற்குப் பிறகு பக்கத்திலே இருக்கக் கூடிய நிலத்தையே தருவதற்காக பக்கத்து நிலத்தினுடைய சொந்தக்காரர்

1990 ஏப்ரல் 24]

முன்வந்து காண்டியப்பனூர் கிராமம் சர்வே எண். 54 மற்றும் 57 இந்த இரண்டு 'சர்வே' எண்ணுள்ள 2½ ஏக்கர் நிலத்தை இப்போது விலை மதிப்பீடு சான்றிதழ் அனுப்ப மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றிதழ்கள் எல்லாம் வந்தவுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிப்போ கட்டும் வேலை முடிவதற்குள்ளாக திருப்பத்தூரிலும், தர்மபுரியிலும், இருக்கக் கூடிய நகரப் பேருந்துகளை பயன்படுத்தி பிற்பட்ட மக்களின் நலனைக் கருதி சில விதிமுறைகள் இருப்பினும் திருத்தம் அளித்து, அந்தப் பகுதி கிராமங்களுக்கு நகரப் பேருந்து விட அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போது 5 இடங்களுக்கு ஊத்தங்கரையிலிருந்து நகரப் பேருந்துகள் செலுத்தப்படுகின்றன. அந்தப் பேருந்துகள் எல்லாம் திருப்பத்தூர் கிளை பணிமனையிலேதான் இரவில் தங்கலுக்காக கொண்டு செல்லப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று ஊத்தங்கரையிலிருந்து மேலும் 3 இடங்களுக்குக் கூடுதல் நகரப் பேருந்துகள் விடுவதற்கு நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

சேலத்தில் விமான நிலையம் அமைத்தல்

*526—திரு. பொன். விஜயராகவன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் விமான நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலத்தில் விமான நிலையம் அமைக்க மாநில அரசு சுமார் ரூ. 70.15 இலட்சம் செலவில் 130 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி தேசிய விமான நிலையக் குழுமத்திற்கு இலவசமாக ஒப்படைத்துள்ளது. மேலும் நிலத்தினை சமன் செய்யும்